**மெததும்பர பிரதேச சபையின் - 2021**

---

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

மெததும்பர பிரதேச சபையின் 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று, அத்திகதியில் முடிவடைந்த வருமானச் செலவினக் கணக்கு, முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகள் மற்றும் ஏனைய விளக்கமளித்தல் தகவல்களின் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2021 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபை சட்டத்தின் 172 (1) ஆம் உபபிரிவு மற்றும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் ஏற்பாடுகளின் பிரகாரம் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையில் உள்ளடக்கப்பட்ட ஏற்பாடுகளின் பிரகாரம் எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இந்த அறிக்கையில் காண்பிக்கப்பட்டுள்ளன.

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்டுள்ள விடயங்களிலிருந்தான தாக்கங்களைத் தவிர்த்து, நிதிக்கூற்றுக்களிலிருந்து 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறு மெததும்பர பிரதேச சபையின் நிதி நிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதன் நிதிச் செயலாற்றல் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுக் நடைமுறைகளுக்கு இணங்க உண்மையான மற்றும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கின்றது என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியாக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக எனது பொறுப்பு, கணக்காய்வாளரின் பொறுப்பு என்ற பிரிவில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளது. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக முகாமைத்துவத்தின் மற்றும் தொடர்பான நிருவாகத்தினரின் பொறுப்புக்கள்

இந்நிதிக்கூற்றுக்களை பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு நடைமுறைகளுக்கு அமைவாக தயாரித்தல் மோசடிகள் மற்றும் தவறுகள் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் இன்றிய நிதிக்கூற்றுக்களை தயாரிக்க கூடிய வகையில் உள்ளகக் கட்டுப்பாட்டினை தீர்மானித்தல் முகாமைத்துவத்தின் பொறுப்பாகும்.

பிரதேச சபையின் நிதி அறிக்கையிடல் நடைமுறை சம்பந்தமான பொறுப்பு ஆளுகைத் தரப்பினர்களால் ஏற்றுக் கொள்ளப்படும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 16(1) உப பிரிவின் பிரகாரம் பிரதேச சபையின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு முடியுமான வகையில் சொந்த வருமானங்கள், செலவுகள், சொத்துக்கள், பொறுப்புக்கள் என்பன தொடர்பாக முறையான ஏடுகள் மற்றும் அறிக்கைகள் பேணப்படுதல் வேண்டும்.

## 1.4 கணக்காய்வு விடயப் பரப்பு (நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள்)

---

ஒட்டுமொத்தமாக நிதிக்கூற்றுக்கள் மோசடி மற்றும் தவறுகளின் காரணமாக ஏற்படுகின்ற பொருண்மையான பிறழ் கூற்றுக்களற்றவை என்பதற்கு நியாயமான உறுதிப்பாட்டை வழங்குவதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்குகின்ற கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கையை வழங்குவதும் எனது குறிக்கோளாகும். நியாயமான உறுதிப்பாடானது உயர் மட்டத்திலான ஒரு உறுதிப்பாடாகக் காணப்படுகின்ற போதிலும், இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எவ்வேளையிலும் பொருண்மையான பிறழ் கூற்றுக்களை வெளிப்படுத்தும் என்பதற்கான ஒரு உத்தரவாதமாக இருக்கமாட்டாது. மோசடிகள் மற்றும் தவறுகள் தனியாகவோ அல்லது கூட்டாகவோ தாக்கத்தை ஏற்படுத்துவதன் காரணமாக பொருண்மையான பிறழ்கூற்றுக்கள் ஏற்படக்கூடியதுடன் இந்நிதிக் கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துபவர்களால் எடுக்கப்படுகின்ற பொருளாதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கவனித்தல் வேண்டும்.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் பகுதியொன்றாக என்னால் கணக்காய்வின் போது தொழில்சார் வெளிப்படைத்தன்மை மற்றும் தொழில்சார் ஐயப்பாடுகளுடன் மேற்கொள்ளப்பட்டது. என்னால் மேலும்,

- வெளிப்படுத்தப்பட்ட கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படையினை வழங்கும் போது மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களில் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களினால் ஏற்படும் ஆபத்துக்களை இனங்காண்பற்கும் மதிப்பீடு செய்வதற்குமாக சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகள் திட்டமிடப்பட்டு அமுல்படுத்தப்பட்டன. பிழையாகக் காட்டுவதன் காரணமாக ஏற்படுகின்ற பொருண்மையான பிறழ்கூற்றுக்களிலிருந்து இடம்பெறுகின்ற தாக்கங்களை விட மோசடிகளால் இடம்பெறுகின்ற தாக்கங்கள் பாரியதாக இருப்பதானது தவறான கூட்டிணைவால், போலி ஆவணங்களைத் தயாரிப்பதனால், வேண்டுமென்றே விட்டுவிடுவதனால், பிழையாகக் காட்டுவதனால் அல்லது உள்ளகக் கட்டுப்பாடுகளைத் தவிர்ப்பதனால் மோசடிகள் ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கமல்லாதிருந்தும் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளைத் திட்டமிடும் வகையில் உள்ளகக் கட்டுப்பாடுகள் மீதான அறிவு பெற்றுக் கொள்ளப்பட்டது.

- பயன்படுத்திய கணக்கீட்டு கொள்கைகளின் பொருத்தத்தன்மை, கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத்தன்மை மற்றும் முகாமைத்துவத்தினால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புகளின் வெளிப்படுத்தல்கள் மதிப்பீடு செய்யப்பட்டன.

- நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடங்கள்களுக்காக அடிப்படையான கொடுக்கல்வாங்கல்கள் நிகழ்வுகள் பிரதான உள்ளக கட்டுப்பாட்டு மற்றும் சம்பவங்கள் பொருத்தமாகவும் நியாயமாகவும் உள்ளடக்கப்பட்டுள்ளது எனவும் வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல் மதிப்பீடு செய்யப்பட்டது.

இயலுமான வரையிலும் தேவையான எந்தவொரு சந்தர்ப்பத்திலும் பின்வருவனவற்றை பரீட்சிப்பதற்காக விடயப்பரப்பு விரிவுபடுத்தப்பட்டுள்ளது.

- தகவல்கள் சமர்ப்பித்தல் தொடர்பாக பார்க்கும் போது பிரதேச சபையின் செயற்பாடுகள் தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யப்படக்கூடிய வகையில் அதன் ஒழுங்கமைப்பு, முறைமைகள், வழிகாட்டிக் கோவை, பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதியளவிலும் திட்டமிடப்பட்டுள்ளதா எனவும் அதன் முறைமைகள், வழிகாட்டிக் கோவை, பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமாக பேணிச்செல்லப்படுகின்றதா எனவும்

- ஏதேனும் உரிய எழுத்துமூல சட்டத்திற்கோ அல்லது பிரதேச சபையினால் வழங்கப்பட்ட பொது அல்லது விசேட ஏற்பாடுகளுக்கு இணங்க பிரதேச சபை செயற்படுகின்றதா எனவும்

- தனது அதிகாரங்கள், இலக்குகள் மற்றும் பணிகளுக்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும்

- வளங்கள் சிக்கனமாகவும், செயற்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் காலஎல்லைக்குள் மற்றும் உரிய சட்ட விதிகளுக்கு இணங்க பெறுகை செய்யப்பட்டுள்ளதாகவும்

## 1.5 ஏனைய சட்டத்தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் கணக்காய்வுச் சட்டத்தில் கீழே குறிப்பிடப்பட்ட தேவைப்பாடுகள் தொடர்பாக விசேட ஏற்பாடுகள் உள்ளடக்குகின்றன.

(அ) 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 6(1)(ஈ)(iii) ஆம் பிரிவின் தேவைப்பாடுகளின் பிரகாரம் பிரதேச சபையின் நிதிக்கூற்றுக்கள் முன்னைய ஆண்டுடன் ஒத்திருக்கின்றன.

(ஆ) 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 6(I)(ஈ)(iv) ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள தேவைப்பாடுகளின் பிரகாரம் முன்னைய ஆண்டின் போது என்னால் மேற்கொள்ளப்பட்ட பரிந்துரைகள் சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்குகின்றன.

## 1.6 நிதிக்கூற்றுக்களை தயாரிப்பது தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள்

### 1.6.1 நிகழத்தக்க பொறுப்புகள்

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| சபைக்கு எதிராகத் தொடரப்பட்ட 09 வழக்குகள் மற்றும் சபையால் தொடரப்பட்ட 01 வழக்கிற்காக சட்டத்தரணிகள் கட்டணமாக முன்னைய ஆண்டிலும் மீளாய்வாண்டிலும் முறையே ரூபா 238,500 மற்றும் ரூபா 9,000 என மொத்தம் ரூபா247,500 மீளாய்வாண்டின் போது கொடுப்பனவு செய்யப்பட்டிருந்த போதும் அந்த வழக்குகள் தொடர்பான தகவல்கள் நிதிக்கூற்றுக்களில் வெளிப்படுத்தப்பட்டடிருக்கவில்லை. | எதிர்காலத்தில் சீர்செய்வதற்கு நடவடிக்கை எடுப்பதாக அறிவிக்கப்பட்டிருந்தது. | தீர்வு செய்யப்படாத வழக்குகள் தொடர்பாக நிதிக்கூற்றுக்களில் வெளிப்படுத்தப்பட வேண்டும். |

### 1.6.2. இணக்கஞ் செய்யப்படாத கட்டுப்பாட்டுக் கணக்குகள்

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| நிதிக்கூற்றுக்களில் காணப்படுகின்ற ரூபா 193,575,768 கூட்டுத் தொகையான 08 கணக்கு விடயங்களுக்குரிய மீதிகள் மற்றும் அவற்றிற்குரிய பட்டோலைகளின் பிரகாரம் மீதிகளுக்கும் இடையே ரூபா 34,797,401 ஆன வேறுபாடு அவதானிக்கப்பட்டது. | அட்டவணைகளை நாளதுவரையாக்குவதற்கும் குறித்த பேரேட்டினை சீராக்குவதாகவும் அறிவிக்கப்பட்டிருந்தது | வேறுபாடுகள் இனங்கண்டு நிதிக்கூற்றுக்களில் தேவையான சீராக்கங்களை மேற்கொள்ள வேண்டும. சரியாக தயாரிக்க வேண்டும். |

### 1.6.3 கணக்காய்விற்கான எழுத்துமூலமான சான்றுகள் இன்மை

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்ட ஆவணங்கள் மற்றும் அட்டவணைகளில் உள்ளடக்கப்படாத முன்னைய ஆண்டுகளில் இருந்து வரும் ரூபா 754,812 தொகை இனங் காணப்படாத 02 கணக்கு மீதிகள் தீர்வு செய்யப்பட்டிருக்கவில்லை. | குறித்த மீதியை சீராக்குவதற்கு நடவடிக்கை எடுத்து வருவதாக அறிவிக்கப்பட்டிருந்தது. | மீதிகள் இனங்காணப்பட்டு தீர்வு செய்யப்பட வேண்டும். |

### 1.7. இணங்காமைகள்

**சட்டங்கள், விதிகள், பிரமாணங்களுடன் இணங்காமை**

தெரிவுக் பரிசோதனையின் போது அவதானிக்கப்பட்ட சட்டங்கள், விதிகள், பிரமாணங்களுடன் இணங்காத சந்தர்ப்பங்கள் கீழே காண்பிக்கப்படுகின்றன.

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்களுடனான தொடர்பு | இணங்காமைகள் | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபை சட்டத்தின் 149 ஆம் பிரிவு | சபை அதிகாரப் பிரதேசத்தில் நடாத்திச் செல்லப்படுகின்ற 09 ஹொட்டெல்களின் உள்ளவாறான வருமானம் நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் உறுதிப்படுத்தாமல் ரூபா 741,181 ஆன கட்டணங்கள் அறவிடப்பட்டிருந்தன. அடுத்த ஆண்டின் போது சீராக்குவதற்கு நடவடிக்கை எடுப்பதாக அறிவிக்கப்பட்டிருந்தது. | அவதானிப்பில் உள்ளடக்கப்பட்ட சில ஹொட்டெல்கள் சுற்றுலா சபையில் பதிவு செய்யப்பட்டிருக்காததுடன் இது தொடர்பாக உறுதிப்படுத்தி எதிர்வரும் நடவடிக்கை எடுப்பதாக அறிவிக்கப்பட்டிருந்தது. | பெற வேண்டிய வருமானம் சரியாக இனங்காணப்பட்டு கட்டணங்கள் அறவிடப்பட வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| (ஆ) | இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப்பிரமாணக் கோவை | | | |
| (i) | 2020 ஆகஸ்ட் 28 ஆந் திகதிய 01/2020 ஆம் இலக்க அரச நிதிச் சுற்றறிக்கையினால் திருத்தப்பட்ட நிதிப்பிரமாணம் 371 (2) (ஆ) | நிதிப் பிரமாணம் 371(2)(ஆ) செயல்நிமித்த கட்டு நிதி வழங்கப்படும் செயற்பாடு முடிவடைந்தவுடன் தீர்வு செய்யப்பட வேண்டிய போதிலும் வெவ்வேறு செயல்பாடுகளுகடகாக பல்வேறு சந்தர்ப்பங்களில் போது மீளாய்வாண்டில் வழங்கப்பட்டிருந்த ரூபா 1,698,650 ஆன செயல்நிமித்த கட்டுநிதி 07 நாட்கள் முதல் 303 நாட்கள் வரையான கால தாமதத்தின் பின்னர் தீர்வு செய்யப்பட்டிருந்தன. | எதிர்காலத்தில் குறித்த செயற்பாடு முடிவடைந்தவுடன் முற்பணத்தை தீர்வுசெய்யுமாறு அறிவிக்கப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டிருந்தது. | நிதிப் பிரமாணத்தின் பிரகாரம் கால தாமதமின்றி செயல் நிமித்த கட்டுநிதியை தீர்வ செய்ய நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (ii) | நிதிப்பிரமாணம் 571(2) | வைப்புச் செய்து 02 ஆண்டுகளுக்கு மேற்பட்ட ரூபா 1,107,403 ஆன 68 வைப்பு மீதிகள் தொடர்பாக நிதிப்பிரமாணத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | 2022 ஆம் ஆண்டின் போது 02 ஆண்டுகளை மிகைத்த வைப்புக்கள் தொடர்பாக எதிர்வரும் நடவடிக்கைகள் எடுப்பதாக அறிவிக்கப்பட்டிருந்தது. | நிதிப் பிரமாணத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும். |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் 2021 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்காக சபையின் மீண்டுவரும் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 31,365,221 ஆக இருந்ததுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் மீண்டெழும் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 22,588,403ஆக இருந்தது.

## 2.2 வருமான நிர்வாகம்

### 2.2.1 வருமான சேகரிப்பின் செயலாற்றல்

| | கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| **(அ)** | **வீதவரி** | | |
| (i) | மீளாய்வாண்டின் ஆரம்பத் திகதியில் காணப்பட்ட ரூபா 1,119,875 ஆன நிலுவை வீதவரி மீதியில் ரூபா 296,672 அதாவது 26 சதவீதம் மாத்திரம் அறவிடப்பட்டு இருந்ததுடன் பிரதேச சபை சட்டத்தின் 158 ஏற்பாடுகளின் பிரகாரம் அந்நிலுவை கட்டணங்கள் அறவிடப்பட்டிருக்கவில்லை. | முறையான திட்டமொன்றின் கீழ் வீதவரி அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படுமென அறிவிக்கப்பட்டிருந்தது. | பிரதேச சபை சட்ட ஏற்பாடுகளின் பிரகாரம் நிலுவை வருமானம் அறவிடப்பட வேண்டும். |
| (ii) | சபையில் 911 மொத்த நீர்ப் பாவனையாளர்களின் 151 இற்கு அதாவது 17 சதவீதத்திற்காக நீர்மானி பொறுத்தப்படாது இருந்ததுடன் வீட்டுப் பாவனையாளர்களுக்காக மாதாந்தம் ரூபா 150 உம் வியாபாரிகளுக்காக மாதாந்தம் ரூபா 500 ஆன கட்டணங்கள் அறவிடப்பட்டதால் நீர் பயன்பாட்டின் அடிப்படையில் சபைக்குப் பெற வேண்டிய வருமானம் இழக்கப்பட்டிருந்தது. மேலும் மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு அறவிடப்பட வேண்டிய நிலுவை நீர்க் கட்டணங்கள் ரூபா 874,551 ஆக இருந்தது. | நீர்மானி பொருத்தி முன்மொழிவு முறைமையை முறைப்படுத்துவதற்கு தேவையான நடவடிக்கைகள் எதிர்காலத்தில் மேற்கொள்வதாகவும் கட்டணங்கள் செலுத்தாதவர்களின் நீர் இணைப்பைத் துண்டிப்பதற்கு நடவடிக்கை எடுப்பதாகவும் அறிவிக்கப்பட்டிருந்தது. | நீர்ப் பாவனையாளர்களுக்கு நீர்மானி பொருத்தி நீர் பயன்பாட்டின் அடிப்படையில் கட்டணங்கள் அறவிடப்ப வேண்டியதுடன் நிலுவைக் கட்டணங்களும் அறவிடப்பட வேண்டும். |

**(ஆ) கடை வாடகை**

| | | | |
|---|---|---|---|
| (i) | மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு அறவிடப்பட வேண்டிய வாடகை மீதி ரூபா 4,142,177 ஆக இருந்ததுடன் உடன்படிக்கைப் பிரகாரம் நிலுவை மீதியை அறவிடுதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. அதில் ரூபா 100,000 ஐத் தாண்டிய 13 கடைகளுக்காக அறவிடப்பட வேண்டிய மீதி ரூபா 2,158,880 ஆக இருந்தது. | இதுவரை ரூபா 363,000 செலுத்தப்பட்டுள்ளதுடன் ரூபா 178,483 தொகை பதிவழிக்கப்பட்டுள்ளதாகவும் ரூபா 377,283 தொகையை பதிவழிப்பதற்காக அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாகம் அறிவிக்கப்பட்டிருந்தது. | உடன்படிக்கையின் பிரகாரம் நிலுவைப் பணம் அறவிடப்பட வேண்டும். |
| (ii) | மீளாய்வாண்டின் ஜனவரி 01 இல் உள்ளவாறு அறவிடப்பட வேண்டிய ரூபா 4,232,629 ஆன குத்தகை வாடகை மீதியில் ரூபா 916,290 தொகையும் மீளாய்வாண்டில் ரூபா 3,130,747 ஆன பட்டியலிடப்பட்டதில் இருந்து ரூபா 2,410,879 உமாக மீளாய்வாண்டில் ரூபா 3,327,169 மாத்திரம் அறவிட்டமை காரணமாக வருமான சேகரிப்பின் முன்னேற்றம் 45 சதவீதமாக இருந்தது. | நிலுவைப் பணத்தைப் பெற்றுக் கொள்வதற்கு இணக்க சபைக்கு அனுப்பப்பட்டுள்ளதுடன் 2022 ஜூன் 30 இல் உள்ளவாறு நிலுவைக்காக வழக்குத் தொடர நிர்ணயிக்கப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டிருந்தது. | உடன்படிக்கையின் பிரகாரம் மாதாந்த வாடகை மற்றும் நிலுவை மீதிகள் அறவிடப்பட வேண்டும். |
| (iii) | சபைக்குச் சொந்தமான 06 கடைகளுக்குரிய உடன்படிக்கை திருத்தப்படாமல் 2015 ஆம் ஆண்டின் மதிப்பீட்டின் பிரகாரம் பழைய உடன்படிக்கையின் கீழேயே கடைகளில் இருந்து வாடகை அறவிடப்பட்டிருந்தன. | புதிய மதிப்பீட்டை செயற்படுத்துதல் மற்றும் புதிய உடன்படிக்கைகளுக்கு வருதல் தற்காலிகமாக இடைநிறுத்தப்பட்டுள்ளதுடன் புதிய மதிப்பீட்டைச் செயற்படுத்துவதற்கு உள்ளூராட்சிமன்ற ஆணையாளரின் ஆலோசனைக்காக எழுத்து மூலம் அறிவிக்கப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டிருந்தது. | புதிய மதிப்பீட்டின் பிரகாரம் உடன்படிக்கை தீரத்தம் செய்யப்பட்டு வாடகை அறவிடப்பட வேண்டும். |

(ஈ) **ஏனைய வருமானங்கள்**

| | | |
|---|---|---|
| மீளாய்வாண்டில் திசெம்பர் 31 இல் உள்ளவாறு அறவிடப்பட வேண்டிய ரூபா 2,320,335 ஆன முச்சக்கர வண்டி கட்டண நிலுவையில் 5 ஆண்டுகளுக்கு மேற்பட்ட காலமாக நிலுவையாக இருந்த ரூபா 952,970 தொகையும் 2 ஆண்டுகள் முதல் 4 ஆண்டுகளுக்கு இடைப்பட்ட காலவீச்சில் நிலுவையாக இருந்த ரூபா 795,495 தொகையாக இருந்ததுடன் நிலுவை கட்டணங்களை அறவிடுவதற்கு சபையால் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | இந்நிலுவையில் ரூபா 365,100 தவறுதலாக பட்டியலிடப்பட்டு இருந்ததுடன் அதனைப் பதிவழிப்பதற்காக அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாகவும் எஞ்சிய கட்டணங்களை முறையாக திட்டமொன்று தயாரிக்கப்பட்டு அறவிடுவதற்கு நடவடிக்கை எடுப்பதாக அறிவிக்கப்பட்டிருந்தது | நிலுவை வருமானங்களை அறவிடப்படல் வேண்டும். |

.